புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **21 ஜனவரி 2023**

# பத்திரிகை செய்தி

மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் இளைஞர் விவகாரங்கள் & விளையாட்டு அமைச்சகம் இணைந்து நடத்தும் பழங்குடியின இளைஞர்கள் பரிமாற்று திட்டத்தின்கீழ் புதுச்சேரி வந்த இளைஞர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி துணைநிலை ஆளுநர் மாளிகையில் இன்று நடைபெற்றது.

புதுச்சேரி நேரு யுவக் கேந்திரா அமைப்பின் சார்பில் ஜார்கண்ட், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், ஒடிசா மற்றும் தெலங்கானா மாநிலங்களைச் சேர்ந்த 200 பழங்குடியின இளைஞர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சி பங்கேற்றனர்.

மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் இளைஞர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு வாழ்வில் மற்றும் சமுதாய மேம்பாட்டிற்கான ஆலோசனைகள் வழங்கினார். நேரு யுகக் கேந்திராவின் துணை இயக்குநர் உடனிருந்தார்.